Registered with the Registrar of News Paper
For India under R.N.I. 11967/'67

வருட சந்தா ரூ.1/-

வருகையின் தூதன்

Those who turn the world upside down. Acts.17:6.

Vol. 67 | அவர்கள் வாயில் உண்மை இல்லை, அவர்கள் உள்ளம் கேடுபாடுள்ளது சங்.5:9 | பெப்ரவரி 2021 No.2

இத்தகைய ஒரு காலத்திற்காக அழைக்கப்பட்டிருக்கிறோம்

Called for such a time as this

Ray Reed

ரோமர் 13:11-14 படிக்க.

அப்.பவுல் இதனைப் பக்குவ மடையாத ரோம சபைக்கு எழுதுகிறார். ரோம சமுதாயமும் அதன் கலாச்சாரமும் வீழ்ச்சி நிலையிலிருந்தது. அந்த சாம் ராஜ்யம் துண்டாகும் நிலையிலிருந்தது. முன்பு அங்கு சட்டம் ஒழுங்கு நல்ல நிலையிலிருந்தது. அரசியலில் நேர்மை யும், சன்மார்க்க நெறி தவறாமலும் கீழ்ப் படிதலும் காணப்பட்டன. இப்போதோ அழிவு, அராஜகம், சுயம், பேராசை போன்ற விதைகள் முளைத்து வேர் விட்டுக் கொண்டிருந்தன. ரோம சாம் ராஜ்யத்தின் வீழ்ச்சியைக் குறித்து எழுதிய சரித்திராசிரியன் எட்வர்டு கிப்பன், அதன் வீழ்ச்சிக்கு காரணம் வெளியிலிருந்து வந்த எதிர்ப்பு அல்ல, ஆனால் உள்ளே லஞ்சமும், அசுத்தமும் காணப்பட்டபடியால்தான் என்று எழுதியிருக்கிறார்.

ரோம சபை இத்தகைய ஒரு சமுதாயத்தில்தான் தனது குழந்தைப் பருவத்தினை ஆரம்பித்தது. இப்போது நாம் வாழ்கின்றது போன்ற இக்கட்டான சமுதாய அரசியல் பொருளாதார மற்றும் சன்மார்க்க நிலையில் தான் அது காணப் பட்டது.

மேற்குறிப்பிட்டுள்ள 11-ம் வசனத்தில் வேளை, காலம் என்ற பதங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. "நித்திரையைவிட்டு எழுந்திருக்கத்தக்க வேளையாயிற்றென்று நாம் காலத்தை அறிந்தவர்களாய், இப்படி நடக்க வேண்டும் .....". முதலாவது குறிப் பிட்டுள்ள வேளை என்பது அவசர நெருக்கடி சமயத்தைக் குறிப்பிடுகிறது. வில்லியம் என்பவர் புதிய ஏற்பாட்டி னை மொழியாக்கம் செய்யும் போது இக்கட்டான தற்கால நிலையை அறிந்து என்று குறிப்பிடுகிறார். எனவே அப் போஸ்தலனாகிய பவுல் இக்காலத்தை நெருக்கடியின் காலம் அவசரமான காலம் என்கிறார்.

இரண்டாவதாக குறிப்பிடப் படும் காலம் நித்திரையை விட்டு எழுந் திருக்க வேண்டிய காலம். அதாவது செயல்படுவதற்கான காலம். அவசரமும் நெருக்கமும் நிறைந்த காலம். நேரம் தாம தமாகிவிட்டது; இது நாம் செயல் படுவ தற்காகக் கொடுக்கப்படும் அழைப்பு. லென்ஸ்கி என்பவர் தமது வியாக்கி யானத்தில், 'எச்சரிக்கை மணி ஒலிக்கிறது' என்கிறார்.

சூழ்நிலைகளைக் குறித்து அவர் தொடர்ந்து விவரிக்கிறார். பதிமூன்றாம் வசனத்தில் "களியாட்டும் வெறியும், வேசித்தனமும், காமவிகாரமும் வாக்கு வாதமும் பொறாமையும் உள்ளவர் களாய் நடவாமல், பகலிலே நடக்கிற வர்கள் போல சீராய் நடக்கக்கடவோம்" என்று கூறுகிறார். அந்த சமுதாயத்தின் பாவங்கள் இவை மட்டுமல்ல இதற்குள் ளடங்கிய பாவங்கள் ஏராளம்.

களியாட்டும் வெறியும்

இது சரீரத்தோடு தொடர்புடை யது. அதாவது அவர்கள் காட்டுமிராண்டி கள் போல் கட்டுப்பாடின்றி, களியாட்டு களில் ஈடுபட்டிருந்தனர். மக்கள் கூட்டம் கூட்டமாக சட்ட திட்டங்களுக்குக் கீழ்ப் படியாமல் நிர்விசாரமாகச் சுற்றி அலை வார்கள். அவர்கள் தாங்கள் விரும்பி னதைச் செய்வார்கள். விரும்பினவர் களை அழைப்பார்கள், விரும்பியது போல் நொறுக்குவார்கள். செல்வங்களை அழிப்பதுதான் அந்நாட்களின் சீரா யிருந்தது. சட்டம் ஒழுங்கு பாதுகாக்கப் படவில்லை. இன்றைய நிலைதான் அங்கு காணப்பட்டது.

வேசித்தனமும் காமவிகாரமும்

ரோம நாட்டில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் நடந்ததைக் குறிப் பிடுகிறார். நாம் அவர்களைச் சுட்டிக் காண்பிக்க முடியாது. ஏனெனில் நமது சமுதாயம் இன்று இதே நிலையில் தான் காணப்படுகிறது. எச்சரிப்பின் சத்தத் திற்கு நாம் கீழ்ப்படிய வேண்டியவர் களாயிருக்கிறோம். காமவிகாரம் என்பது கிரேக்க பதங்களில் மிகவும் இழிவானது. இந்த சீர்கேட்டை அவர்கள் பெரிதாகக் கொண்டிருந்தனர்.

வாக்குவாதமும் பொறாமையும்

சண்டையிடுதல், வாக்குவாதம் செய்து குழப்பங்களை தூண்டிவிடுதல் இவற்றிலடங்கும். இதே நிலை இன்று கிறிஸ்தவர்கள் மத்தியில் காணப்படு கிறது. ஆனால் கிறிஸ்துவின் அன்புதான் இவ்விடங்களை நிரப்ப வேண்டும். கிறிஸ்துவின் பரிதாபம் நம்மில் நிரம்பி தீமைகள் பின்தள்ளப்பட வேண்டும். ஆண்டவராகிய இயேசு உயர்த்தப்பட வேண்டும்.

பொறாமையில் பெருமை, பகைமை போன்றவை காணப்படு கின்றன. பொறாமை மிகவும் பயங்கர மானது. அது சபையில் நுழைந்து மக்களுக்குள் அழிவை ஏற்படுத்தக் கூடியது. பிறர் முன்னேறுவதையும் கர்த்தருக்காகப் பயன்படுத்தப்படுவதை யும் பார்க்க சகிக்காத தன்மை அது. எனவே தீமை நிறைந்த ஒரு சமுதாயத் தைக் குறித்து பவுல் விவரிக்கிறார். ஆக அது இக்கட்டான நிலை. இதற்கு நிவாரணம் செய்யப்பட வேண்டும். பவுல் இத்தகைய வளர்ச்சியற்ற சபையை செயல்படும்படி அழைக்கிறார். போதகர் களும், சபைகளும், கிறிஸ்தவர்களும் அவசரமான நிலையிலிருப்பதால் செயல் பட அழைக்கப்படுகிறார்கள்.

நித்திரையை விட்டு எழும்ப வேண்டும்

காலம் தாமதித்துவிட்டது. ஜாக் கிரதையுடன் விழித்தெழும்பி இயேசுவுக் காக வாழவேண்டும். அற்பமானவற்றை உதறித்தள்ள வேண்டும். பூமிக்கு உப்பாக வும் உலகுக்கு ஒளியாகவும் விளங்க வேண்டும். அழிந்து கொண்டிருக்கும் சமுதாயத்துக்காக எதையாவது செய்து தேவதிட்டத்தை நிறைவேற்றுவோம்.

கிறிஸ்தவ நண்பர்கள், நாம் வாழும் இந்தக் காலத்தை உணர்ந்து இது நமது வாய்ப்பின் காலம் என்று அறிந்து கொள்ள வேண்டும். இத்தகைய ஒரு காலத்திற்காக தேவ ராஜ்யத்திற்குள் அழைக்கப்பட்டோம். தேவன் நமக்குப் போதுமானவர். வளர்ச்சிக் குன்றிய ரோம சபை பிழைத்து நமக்குள்ளே வாசம் பண்ணும் ஆவியானவரால் பெலப்பட்டது என்றால், இன்று வாழும் நமது தலைமுறையும் நமது சமுதாயத் திற்குத் தாக்கத்தை ஏற்படுத்த முடியும். அதற்காக வேதவசனத்தை கவனிப் போம், செயலிலிறங்குவோம். தேவனு டைய காரியங்களில் உற்சாகமாய் ஈடுபடுவோம்.

அந்தகார கிரியைகளைத் தள்ளிவிடுவோம்

"இரவு சென்றுபோயிற்று, பகல் சமீபமாயிற்று; ஆகையால் அந்தகாரத் தின் கிரியைகளை நாம் தள்ளிவிட்டு, ஒளியின் ஆயுதங்களைத் தரித்துக் கொள்ளக்கடவோம்"

இரண்டாவதாக நாம் அந்தகாரக் கிரியைகளைத் தள்ளிவிட வேண்டும்.

(3-ம் பக்கம் பார்க்க)

அன்பான வேண்டுகோள்

வங்கி வழியாக காணிக்கை அனுப்பினால் தயவு செய்து உடனே எங்களுக்கு தெரியப் படுத்துங்கள்

மொபைல் : 95432 21008
வாட்ஸ்ஆப் : 94897 40295

வருகையின் தூதன்

ஆசிரியர்:
வெஸ்லி தேவதாசன்
(Former Editor : S.Devadason 1955 - 1999)

Advisory Board : T. Peter, D. StanlyJones, S. Thomas Ganesh, Christy Samuel, Christinal P.Mony

இம்மாத பொன்னான சிந்தனை

கிறிஸ்துவின் அன்பு நம்மில் உண்டானால், தொலைந்து போகும் ஆத்துமாக்களின் கதியை எண்ணி கலங்காமல் இருக்க முடியுமா? இன்று கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக்கொள்ளும் பலர் தேவனை ஆராவாரத்தோடு ஆராதிக்கும் பரவசத்தில் லயித்துபோய் இருப்பதால் பாவத்தில் மரிப்பவர்கள் அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்களே என்ற சிந்தையின்றி வாழ்கிறார்கள் வெளி.21:8.

ஆஸ்வால்டு J. ஸ்மித் கூறினார், "நண்பர்களே, எண்ணற்ற சபைப் பணிகளில் மூழ்கியுள்ளோம், ஆனால் திருச்சபையின் மெய்யானப் பணிகளாகிய நற்செய்தி மயமாக்குதலும், ஆத்துமாக்களை வெல்லுவதும் நிராகரிக்கப்பட்டுள்ளன". ஆம், நாம் வானத்தையே அண்ணார்ந்து பார்த்துக் கொண்டிருக்கையில், பாவிகள் பாதாளத்திற்குச் சென்று கொண்டிருக்கிறார்கள்.

வாக்குத்தத்தம்

நீ உயிரோடிருக்கும் நாளெல்லாம் ஒருவனும் உனக்கு முன்பாக எதிர்த்து நிற்பதில்லை; நான் மோசேயோடே இருந்தது போல, உன்னோடும் இருப்பேன்; நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை யோசுவா 1:8.

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே,

பிதாவாகிய தேவனாலும், நம்முடைய இரட்சகராயிருக்கிற கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் கிருபையும் இரக்கமும் சமாதானமும் உண்டாவதாக.

2021 பெப்ரவரி மாத தூதனுக்காக என் தேவனை அதிக நன்றியோடும், வெகு மனத்தாழ்மையுடனும் துதிக்கிறேன். முதலாவது ஒரு வாசகர் கடிதத்தை கீழே அச்சிடுகிறேன்.

08.12.2020, காஞ்சிபுரம்

அன்பும், கர்த்தருக்கு பிரியமான சகோதரர் வெஸ்லி தேவதாசன் அவர்களுக்கு, தங்கள் குடும்பத்தாருக்கு, தங்கள் பணியாற்றும் சக ஊழியர்களுக்கும் ஸ்தோத்திரம் செய்து சகோதரி எழுதும் விண்ணப்பம்.

தங்கள் பத்திரிகை ஊழியம் செய்து வந்த தங்கள் தந்தை காலத்திலிருந்தே சுமார் 40 வருட காலமாக எனக்கு இந்த பத்திரிக்கையின் விசுவாசியாக செயல்பட்டு வருகிறேன்.

இன்று வரை அந்த பத்திரிக்கையின் விசுவாசிகள் பெரிதும் பாராட்டி வருவதோடு நானும் இந்த ஊழியத்தை வரவேற்கிறேன். கர்த்தருடைய வார்த்தைகளை பெற்று என் வீட்டிற்கு வருகையின் தூதன் வருகிறான் (மாதந்தோறும்) பெருமையுடனும் ஆவலுடனும் பெற்று வருகிறேன்.

இதை வெளியிட்டு வருகிற தங்களையும், உடன் ஊழியர்களையும் வாழ்த்துகிறேன். என் ஜனங்கள் எப்படி வாழ வேண்டும் என்கிற பலதரப்பட்ட எடுத்துக்காட்டு மூலம் விளங்க செய்கிறீர்.

என் மகன் 49 வயதில் மாரடைப்பால் உயிர் பிரிந்தது. 29.06.2020 ஆன்மா பிரிந்து 6 மாதம் ஆகிறது. என் கணவர் மனம் மாறவும் ஜெபியுங்கள். உங்கள் அனைவருக்கும் என் கிறிஸ்துமஸ் வாழ்த்துக்கள். பத்திரிகை ஊழியத்திற்கு ரூ.500/- அனுப்புகிறேன். பெற்றுக்கொள்ளவும். எங்கள் குடும்பத்திற்கு தடைகள் பல உள்ளன. என் குடும்பத்திற்காக ஜெபிக்க உங்களை பணிவுடன் வேண்டுகிறேன்.

கர்த்தரின் பிள்ளை, **R.V.K**

ஒருவன் சிலுவையிலறையப் படும்போது அவன் சுற்றிலும் பார்க்க முடியாது. அவனது முகம் ஒரே திசையை நோக்கியிருக்கும். அவ்வாறு நோக்குவது அவன் தேவனால் அழைக்கப்பட்டவன் என்பதையும், அவருக்காகப் பணியாற்ற நிறுத்தப்பட்டிருக்கிறான் என்பதையும் காண்பிக்கிறது.

கொரோனா

டிசம்பர் மாத இறுதியில் அடியேனுக்கு வந்த ஒரு பத்திரிகையில், "கொரோனா (Corona) தொற்று பரவிய கடந்த 8 மாதங்களில் சுமார் 300 ஊழியர்கள் மரித்து தேவ மகிமைக்குள் பிரவேசித்ததாக தகவல் (உறுதி செய்யப்படாத) அறிந்தோம்" என்று எழுதப்பட்டிருந்தது.

கொரோனா எல்லாரையும் பாதித்தது போல அச்சுத் துறையையும் பாதித்திருக்கிறது. எனவே இந்த ஆண்டு நாம் விரும்பினது போல **"வேதாகம படங்கள்"** நமக்கு கிடைக்க வில்லை.

பத்திரிகை பணி

பத்திரிகை பணிக்காக நாம் உபயோகித்து வந்த United Bank of India வங்கி, மத்திய அரசு அறிவிப்பின்படி, **Punjab National Bank** வங்கியுடன் இணைக்கப்பட்டுள்ளதால் நமக்கு புதிய **IFS** கோட் எண் தந்துள்ளார்கள். எனவே புதிய கோட் எண்ணை பயன்படுத்தும்படி அன்பாய் கேட்கிறோம்.

A/c. Name : **WESLEY DEVADASON,** A/c. No.: **2131010118439**
Punjab National Bank, Nagercoil -1. IFSC Code:**PUNB0213120**

வருகையின் தூதன் உபவாச ஊழியம்

இந்த வங்கியில் எந்த மாற்றமும் இல்லை, எனவே வழக்கம் போல பயன்படுத்துங்கள்.

A/c. Name : **WESLEY DEVADASON,** A/c. No.: **370601000002557**
I.O.B., Nagercoil -1 IFSC Code : **IOBA0000063**

முன்னேற்றப் பணி

நாம் உபயோகித்து வந்த Syndicate வங்கியை **Canara** வங்கியுடன் மத்திய அரசு இணைத்துள்ளதால் **IFS Code** மாறியுள்ளது. புதிய கோட் எண்ணை பயன் படுத்துமாறு அன்பாய் கேட்கிறோம்.

A/c. Name : **WESLEY DEVADASON,** A/c. No.: **61822200136904**
Canara Bank, Ngl-1 IFSC Code : **CNRB0000033**

மேலும் விபரங்களுக்கு தயவு செய்து அலுவலகத்தை தொடர்பு கொள்ளுங்கள்.

Net Banking

வங்கி வழியாக பணம் அனுப்புவோர் தயவாய் **உடனே** எங்களுக்கு தகவல் தாருங்கள். **உங்கள் கணக்கில் வரவு வைக்க அது அத்தியாவசியமாகும்.**

தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.
தேவ கிருபை உங்களோடிருப்பதாக.

உதவி : **94897 40295**
அலுவலகம் : **95432 21008**
சமயம் : **10 to 1; 2 to 6**

உங்கள் சகோதரன்,
வெஸ்லி தேவதாசன்
(WESLEY DEVADASON)

வருகையின் தூதன்

- **ஊழியங்களுக்காக தினந்தோறும் ஜெபியுங்கள், மாதந்தோறும் தாங்குங்கள்.**
- **வருடத்திற்கு ஒருமுறை மாத்திரம் காணிக்கை அனுப்புவோர் குறைந்த பட்சம் ரூபாய் 500 அனுப்புங்கள்.**
- **கடிதங்கள், மணியாடர்கள்** அனுப்ப வேண்டிய முகவரி:
  வருகையின் தூதன், நியூபோர்ட் தெரு, நாகர்கோவில் - 629 001
  VARUKAYIN THOOTHAN, Newport Street, Nagercoil-629 001.
  Mobile: 95432 21008, 9489740295, **e-mail:**varukayinthoothan@hotmail.com
- **காசோலை** ***(Cheque & Draft)***
  வெஸ்லி தேவதாசன் என்ற பெயருக்கு மட்டும் அனுப்பும்படி அன்பாய் கேட்கிறேன்.
- **வங்கி** வழியாய் காணிக்கை அனுப்புவோர் (Net Banking) தயவாய் உடனே எங்களுக்கு SMS அனுப்புங்கள், அல்லது அலுவலக செல் நம்பர் **95432 21008** வழியாக தெரிவியுங்கள்.

(1-ம் பக்க தொடர்ச்சி)

தள்ளிவிட வேண்டும் என்பது நம்மோடு எந்தத் தொடர்புமில்லாமலாக்க வேண்டும் என்பதைக் குறிக்கிறது. அவற்றை எறிந்துவிட வேண்டும், தள்ளிப் போட வேண்டும்.

இதே கருத்தை எபிரெயர் 12-ம் அதிகாரத்திலும் காணலாம் (எபி.12:1 படிக்க) முன்னேறுவதற்கு தடையாயிருக்கும் யாவற்றையும் எறிந்து விட வேண்டும்.

பவுல் அப்போஸ்தலர் நாம் ஒரு பந்தய ஓட்டத்தில் இருப்பதை குறிப்பிடுகிறார். இது வானத்தின் கீழுள்ள மிகப் பெரிய ஓட்டம். நாம் இதில் ஓடியே ஆக வேண்டும். எனவே தடையாயிருக்கும் ஆடையானால் அதை அகற்றிவிட்டு முன்னேறி முடிவில் வெற்றியைப் பெற வேண்டும்.

இத்தகைய ஒரு அழைப்பு நமக்குத் தேவையா? நம்மை வெறுமையாக்குவதற்கான அழைப்பு இது. அவை தவறானவையல்ல. ஆனால் பாரமானவை. ஒருவேளை பிறருக்கு அது கெட்டதாகத் தோன்றாமலிருக்கலாம். ஆனால் நமது வாழ்வில் அவை பாரமாயிருக்கின்றன. அவை நம்மைப் பின்னோக்கித் தள்ளுகின்றன. எனவே அவற்றை எறிந்து விட்டு ஆண்டவராகிய இயேசுவுக்காக செயல்படுவோம். அவர் நம்மைத் தம்முடைய சீஷராகப் பிரித்தெடுத்து அர்ப்பணத்தோடு நாம் வாழ விரும்புகிறார்.

தேவனுடைய சேனையில் சில வகைப்படுத்தல்கள் தேவை. நாம் நல்ல போர்ச்சேவகராய் கிறிஸ்துவுக்குக் கீழ் செயல்பட வேண்டும். நல்ல போர்ச் சேவகராய்த் தீங்கு அனுபவிக்க வேண்டும் 2 தீமோ.2:3. போர் வீரனுடைய பணி போர்செய்வது. அதற்கு அவன் தகுதியுடையவனாயிருக்க வேண்டும். நாம் சிலுவையின் போர் வீரர். நமது அழைப்பை நாம் ஏற்றுக்கொண்டு அவர் நம்மை நன்கு பயன்படுத்தும்படி ஜாக்கிரதையுடன் செயல்பட்டு அவர் நாமம் மகிமைப்படும் படி செய்ய வேண்டும். அற்பமான காரியங்களில் ஈடுபடக் கூடாது. அவை தவறல்லாமலிருக்கலாம். ஆனால் அவை நம் முன்னேற்றத்தைத் தடுக்கலாம். எனவே அவற்றை எறிந்து விடுவதே நலம்.

கொலோ.3:5-லும் இந்த நோக்கத்தைக் காண்கிறோம். மாம்சத்தின் கிரியைகளை அழிக்க வேண்டுமென்று அங்கு பார்க்கிறோம். இந்தப் பொறுப்பு நம்முடையது. சிலவற்றை எறிந்துவிட வேண்டும், சிலவற்றை தரித்துக்கொள்ள வேண்டும். இரண்டும் முக்கியம்.

தேவனுடைய ஆயுதவர்க்கத்தை தரித்துக்கொள்ள வேண்டும்

அந்தகாரத்தின் கிரியைகளை நாம் தள்ளிவிட்டு, ஒளியின் ஆயுதங்களைத் தரித்துக் கொள்ளக்கடவோம். இந்த ஆயுதங்கள் எபேசியர் 6-ம் அதிகாரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. சத்தியம் என்னும் இடைக்கச்சை, நீதியென்னும் மார்க்கவசம், சமாதானத்தின் சுவிசேஷத்திற்குரிய ஆயத்தம் என்னும் பாதரட்சை, விசுவாசம் என்னும் கேடயம், இரட்சணியம் என்னும் தலைச்சீரா மற்றும் தேவவசனமான ஆவியின் பட்டயம் என்பவைகளே.

இந்த வரிசையில் இரவு உடை கொடுக்கப்படவில்லை. அல்லது பந்தயக் காரனுடைய ஆடையோ, விசேஷித்த ஆடையோ கூறப்படவில்லை. தேவனுடைய ஆயுதத்தை மட்டுமே நாம் தரிக்க வேண்டும். படைவீரனாக முன்னேறிச் செல்லுவதற்கான சர்வாயுத வர்க்கம் அணிய வேண்டும். விசுவாசத்தின் நல்ல போராட்டத்தைப் போராட வேண்டிய காலம இது. தேவனால் அளிக்கப்பட்ட ஆசீர்வாதமான ஆயுதங்கள் இவை. நமது முழங்கால்களை முடக்கவும், தேவனைத் தேடவும், அவருக்காகக் காத்திருக்கவும் அழைக்கப்படுகிறோம். அவருடைய வசனத்தை நன்கு அறிய வேண்டும். ஆவியினால் நிரம்பியிருப்பதின் மூலம் ஆபத்தான வேளையை சந்திக்க ஆயத்தமாயிருக்க முடியும்.

படையின் முன்னணியில் சென்று எதிரியை எதிர்த்துப் போராட வீரர்கள் வேண்டும். அவர்கள் தேவனுடைய ஆயுதவர்க்கங்களை தரித்தவர்களும், தேவபெலனை பெற்றவர்களுமாயிருக்க வேண்டும். நமக்கு மூன்று போர்முனைகளுண்டு. அவை உலகம், மாமிசம் மற்றும் பிசாசு ஆகியவைகளாகும். பவுல் நல்ல போராட்டத்தைப் போராடி, ஓட்டத்தை முடித்து, விசுவாசத்தைக் காத்துக்கொண்டார்.

சீராய் நடக்க வேண்டும் (உத்தமமாய்)

"களியாட்டும், வெறியும், வேசித்தனமும், காமவிகாரமும் வாக்குவாதமும், பொறாமையும் உள்ளவர்களாய் நடவாமல், பகலிலே நடக்கிறவர்கள் போலச் சீராய் நடக்கக்கடவோம்"

நடப்பது கிறிஸ்தவ வாழ்வில் மிக முக்கியமானது. சரியாகவும் சீராகவும் நடக்க வேண்டும். உங்கள் நடக்கையும் உங்கள் பேச்சும் ஒத்துவர வேண்டும். ஐந்து விதமான நடைகள் எபேசியரில் கூறப்பட்டுள்ளன. எபே.4:1-ல் அழைக்கப்பட்ட அழைப்புக்குப் பாத்திரவான்களாய் நடக்க வேண்டும் என்றும் மற்றப் புற ஜாதிகள் தங்கள் வீணான சிந்தையிலே நடக்கிறதுபோல இனி நடவாமலிருங்களென்று எபே.4:17-லும் அன்பிலே நடந்துகொள்ளுங்கள் என்று 5:2-லும், வெளிச்சத்தின் பிள்ளைகளாய் நடந்து கொள்ளுங்கள் என்று 5:8-லும் ஞான முள்ளவர்களைப் போல கவனமாய் நடந்து கொள்ள வேண்டும் என்று 5:15-லும் வாசிக்கிறோம்.

கிறிஸ்துவைத் தரித்துக் கொள்ளுங்கள்

அனேக காரியங்களை விட்டு விட வேண்டும் என்பதோடு கூட ஒன்றை நாம் தரித்துக் கொள்ளவும் வேண்டும். கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்துவைத் தரித்துக் கொள்ள வேண்டும். அவருக்குள் உங்களை மூடிக் கொள்ள வேண்டும். ஆண்டவராகிய இயேசுவின் சாயலைத் தரித்துக் கொள்ள வேண்டும். சிலுவையிலறையப்பட்ட அவரது வாழ்வை அறிந்துகொள்ள வேண்டும். ஆண்டவராகிய இயேசுவுக்கு அர்ப்பணிக்கப்பட்ட வாழ்வைக் குறித்தும் அவரது ஆவியைக் குறித்தும் அறிந்து கொள்ள வேண்டும். அவர் தமது வாழ்வை நம் மூலமாக வாழ்ந்து அவரது கிருபையின் புகழ்ச்சிக்கும், மகிமைக்கும் ஏதுவாக நம்மை நடத்துவாராக.

ஆண்டவராகிய இயேசு சிலுவையிலறையுண்டதைக் குறித்து இந்நாட்களில் அதிகமாகப் பேசப்படுவதில்லை. கிறிஸ்துவோடு சிலுவையிலறையப்படுதல் என்பது என்ன? இனி நானல்ல கிறிஸ்துவே என்னில் பிழைத்திருக்கிறார் கலா.2:20. ஒருவன் சிலுவையிலறையப்படும்போது அவன் சுற்றிலும் பார்க்க முடியாது. அவனது முகம் ஒரே திசையை நோக்கியிருக்கும். அவ்வாறு நோக்குவது அவன் தேவனால் அழைக்கப்பட்டவன் என்பதையும், அவருக்காகப் பணியாற்ற நிறுத்தப்பட்டிருக்கிறான் என்பதையும் காண்பிக்கிறது. சிலுவையிலறையப்பட்டவன் திரும்பிச் செல்ல முடியாது. அவன் அர்ப்பணிக்கப்பட்டுவிட்டான். தான் என்ன செய்யப்போகிறேன் என்பதை அவன் தீர்மானிக்க முடியாது. ஆண்டவர் அவனது மனதை அவருக்கு நேராகத் திருப்பிவிடுவதால் அவருடைய அதிகாரத்துக்கு அவன் தன்னை பணியச் செய்கிறான். சுயம் சாவது அல்லது சிலுவையிலறையப்படும் வாழ்வைக் குறித்து நாம் அறிந்திருக்க வேண்டும். அதோடு இயேசு கிறிஸ்துவில் வாழும் உயிர்த்தெழுதலின் வாழ்வையும் தெரிந்திருப்பது அவசியம்.

இந்த வேளை ஆபத்தான வேளை. சமயம் முன்னோக்கி வேகமாகச் செல்லுகிறது. நாம் முதலாவது விசுவாசித்ததைவிட இரட்சிப்பு மிகவும் சமீபமாயிருக்கிறது. அப்போஸ்தலனாகிய பவுல் ஆண்டவராகிய இயேசு உடனடியாக திரும்ப வருவதாக நம்பினதாக சிலர் சொல்லுகிறார்கள். மற்றவர்கள் அப்போஸ்தலன் சூழ்நிலைகளைப் பார்த்து புயல் மேகங்கள் சேருவதைக் கண்டு கிறிஸ்துவின் நாமம் தரிக்கப்பட்டவர்கள் மீது பாடுகள் சீக்கிரம் வரப்போவதை உணர்ந்து கொண்டும் கிறிஸ்தவர்கள் சிங்கக் கெபிகளில் போடப்படுவதாலும், தலைகீழாக சிலுவையிலறையப்படுவதாலும் இரட்சிப்பின் பூரணத்திற்குள் பிரவேசிப்பார்கள் என்று எண்ணுகிறார்கள்.

நமக்கு முன்னால் இருப்பது என்ன என்று நாம் அறிவோமா? நமது சமுதாயத்தைப் பார்த்து என்ன நடக்கிறது என்று பார்ப்போம். இந்தவேளை மிகவும் ஆபத்தானது. கிறிஸ்தவர்கள் அழைப்பின் ஒலியை கவனிக்க வேண்டிய வேளை. நித்திரையை விட்டு விழித்து எழும்புவோம்! அந்தகாரக் கிரியைகளை விட்டு விடுவோம். தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தைத் தரித்துக்கொள்வோம். உத்தமமாய் சீராய் நடப்போம். கிறிஸ்துவைத் தரித்துக் கொள்வோம். தேவன் தாமே நமக்கு உதவி செய்வாராக.

* * * * *

மற்றவர்களுக்காக மன்றாடுகிறவர்களுக்கான ஒரு அழைப்பு

A call for intercessors

சபை பரத்தின் வல்லமை யுடனிருப்பதை தேவன் எதிர்பார்க் கிறார். இந்த இருண்ட உலகிற்கு வெளிச்சம் கொடுப்பதற்காகவே தேவன் சபையை வடிவமைத்தார். ஒரு மரணப் போராட்டத்திற்காக உலகம் ஆயத்த மாகிக் கொண்டிருக்கிறது. அதே வேளையில் சபை சரித்திரத்திலே இல்லாத அளவிலான இக்கட்டை அது எதிர்நோக்கியிருக்கிறது. தேவன் திறப்பின் வாயில் நிற்கவும், உலகில் பாவத்தால் மாளும் மக்களைக் குறித்த பாரத்தை எடுத்துக்கொள்ளவும் கூடிய மன்றாட்டு வீரர்களை அழைக்கிறார்.

"ஆ உமது நாமத்தை சத்துருக் களுக்குத் தெரியப்பண்ணுவதற்கும், ஜாதிகள் உம்முடைய சந்நிதிக்குமுன் தத்தளிப்பதற்கும், தேவரீர் வானங் களைக் கிழித்திறங்கி, உருக்கும் அக்கினி எரியுமாப் போலவும் அக்கினி தண்ணீ ரைப் பொங்கப் பண்ணுமாப் போலவும் பர்வதங்கள் உமக்கு முன்பாக உருகும் படி செய்யும்" ஏசா.64:1-2.

மனித குலத்திற்கு மிகப்பெரிய சேவை செய்ய வேண்டுமானால் இந்த காலகட்டத்தில் விழித்திருந்து ஜெபிக்க சமயத்தை எடுத்துக்கொள்வது இன்றி யமையாதது. மன்றாட்டு ஜெபத்தின் மூலம் தேவனோடு இணைந்து கொள்வதே மிகச்சிறந்த ஊழியம். நாம் மிகக்குறைவாக ஜெபிப்பது பாவம் என்பதை ஒத்துக்கொண்டு அதை அறிக்கையிட வேண்டும். தேவனோடு ஜெபத்தின் மூலம் உறவு கொள்வது நமக்கு மிகப்பெரிய சிலாக்கியம்.

சீயோனின் மதில் மேல் காவற்காரர்

"சீயோனினிமித்தமும் எருசலே மினிமித்தமும், நான் மவுனமாயிரா மலும், அதின் நீதி பிரகாசத்தைப் போலவும் வெளிப்படுமட்டும் அமராம லும் இருப்பேன் .... எருசலேமே உன் மதில்களின்மேல் பகல் முழுதும் இரா முழுதும் ஒருக்காலும் மவுனமாயிராத ஜாமக்காரரைக் கட்டளையிடுகிறேன். கர்த்தரைப் பிரஸ்தாபம் பண்ணுகிற வர்களே, நீங்கள் அமரிக்கையாயிருக்க லாகாது. அவர் எருசலேமை ஸ்திரப் படுத்தி, பூமியிலே அதைப் புகழ்ச்சியாக் கும் வரைக்கும் அவரை அமர்ந்திருக்க விடாதிருங்கள்" ஏசா.62:1,6,7.

சோதனை வெற்றியாக மாறியது

எஸ்தர் ராஜாத்தியும் மொர்தெ காயும் ஆபத்தைத் தடுக்க உபவாசித்து ஜெபித்தார்கள். நாமும் உபவாசித்து ஜெபிக்க வேண்டும். நடந்த யாவற்றை யும் மொர்தெகாய் அறிந்த போது, மொர்தெகாய் தன் வஸ்திரங்களைக் கிழித்து, இரட்டுத்தி, சாம்பல் போட்டுக் கொண்டு, நகரத்தின் நடுவே புறப்பட்டு போய் துயரமுள்ள மகாசத்தத்துடனே அலறிக்கொண்டு ....." எஸ்தர் 4:1.

"நீர் போய் சூசானில் இருக்கிற யூதரையெல்லாம் கூடிவரச்செய்து மூன்று நாள் அல்லும் பகலும் புசியா மலும் குடியாமலுமிருந்து, எனக்காக உபவாசம் பண்ணுங்கள்; நானும் என் தாதிமாரும் உபவாசம் பண்ணுவோம். இவ்விதமாய்ச் சட்டத்தை மீறி, ராஜா வினிடத்தில் பிரவேசிப்பேன்; நான் செத்தாலும் சாகிறேன் என்று சொல்லச் சொன்னாள்" எஸ்.4:16.

இவர்களின் உபவாச ஜெபம் உடனடியாக வரவிருந்த ஆபத்தை வெற்றியாக மாற்றியது. எஸ்தர் ராஜாத்தியின் மன்றாட்டு ஜெபம் யூதரை அழிவிலிருந்து காத்தது.

இன்னும் சில மன்றாட்டு வீரர்கள்

ஆபிரகாம் சோதோம் என்ற பொல்லாத நகரத்துக்காகப் பரிந்து பேசினான். **பத்து நீதிமான்களாவது அந்தப் பட்டணத்தில் இருந்திருந்தால் நியாயத்தீர்ப்புக்கு அது தப்பியிருந்திருக்கும்.**

மோசே இஸ்ரவேல் ஜனங்களுக் காக மறுபடியும் மறுபடியும் மன்றாடி னான். நமது ஆண்டவராகிய இயேசு வுக்குச் சான்றான மன்றாட்டு வீரனாய் அவனிருந்தான். இஸ்ரவேல் மக்கள் பொன் கன்னுக்குட்டியை உண்டு பண்ணின போது மோசே அவர்கள் செய்த மகாபெரிய பாவத்திற்காக மன்னிப்புக் கோரினான். தன் பெயரை ஜீவபுஸ்தகத்திலிருந்து கிறுக்கிப் போடும் படி அவன் கெஞ்சினான் யாத்.32:32. "ஒருவன் தன் சிநேகிதருக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு ஒருவரிடத்திலு மில்லை" யோவா.15:13.

பாபிலோனிய சிறையிருப்பி லிருந்த தன் ஜனங்களுக்காக தானியேல் மன்றாடினான். "நான் உபவாசம் பண்ணி, இரட்டிலும் சாம்பலிலும் உட்கார்ந்து, தேவனாகிய ஆண்டவரை ஜெபத்தி னாலும் விண்ணப்பங்களினாலும் தேட என் முகத்தை அவருக்கு நேராக்கி : என் தேவனாகிய கர்த்தரை நோக்கி ஜெபம் பண்ணி பாவ அறிக்கை செய்து; ஆ, ஆண்டவரே உம்மில் அன்பு கூர்ந்து, உம்முடைய கற்பனைகளைக் கைக் கொள்ளுகிறவர்களுக்கு, உடன் படிக்கை யையும், கிருபையையும் காக்கிற மகத்துவமும் பயங்கரமுமான தேவனே, நாங்கள் பாவஞ்செய்து, அக்கிரமக்காரரா யிருந்து, துன்மார்க்கமாய் நடந்து, கலகம் பண்ணி, உம்முடைய கற்பனைகளை யும் உம்முடைய நியாயங்களையும் விட்டு அகன்று போனோம்" தானி.9:3-5.

எருசலேமில் மீந்திருந்தவர்களின் துன்பத்தை நெகேமியா கேள்விப் பட்டான். அப்போது அவன் "நான் உட்கார்ந்து அழுது சில நாளாய்த் துக்கித்து, உபவாசித்து, மன்றாடி, பரலோகத்தின் தேவனை நோக்கி ....." நெகே.1:4. அதன் விளைவாக பெர்சிய மன்னன் அர்தசஷ்டா நெகேமியாவுக்கு மனிதரையும் பொருளாதாரத்தையும் கொடுத்து அனுப்பினான்.

2 நாளா.34:19-ல் யோசியா ராஜா நியாயப் பிரமாணத்தின் வார்த்தை களைக் கேட்டபோது, தன் வஸ்திரங் களைக் கிழித்துக் கொண்டதாக வாசிக்கி றோம். அவன் மக்களுக்காக பாரங் கொண்டான். தொடர்ந்து மகிமையான சீர்திருத்தம் ஏற்பட்டது. யூதாவின் விக்கி ரகங்கள் அகற்றப்பட்டன. எப்போது மில்லாத விதத்தில் பஸ்கா ஆசரிக்கப் பட்டது. நியாயத்தீர்ப்பு நிறுத்திவைக்கப் பட்டது. காரணம் 'உன் இருதயம் இளகி, எனக்கு முன்பாக நீ உன்னைத் தாழ்த்தி, எனக்கு முன்பாகப் பணிந்து உன் வஸ்திரங் களைக் கிழித்துக் கொண்டு, எனக்கு முன்பாக அழுதபடியினால், நானும் உன் விண்ணப்பத்தைக் கேட்டேன் என்று கர்த்தர் சொல்லு கிறார்" 2 நாளா.34:27.

சீர்திருத்தத்தைக் கொண்டு வந்தது மார்ட்டின் லூதர் மட்டுமல்ல. விசாரணை நடைபெறும் கிடங்கு களிலும், ஹாலந்தின் கால்வாய்களிலும், இங்கிலாந்தின் பச்சை நிலங்களிலும், ஐரோப்பாவின் குடிசைகளிலும், மாளிகை களிலும் வேதத்தை இரகசியமாக வாசிக்கிற மக்களிருந்தனர். அவர்கள் 'ஆண்டவரே இது எத்தனை காலம் நீடிக்கும்?' எனக் கதறினர். கடைசியாகப் பதில் வந்தது. வட்டிக்கன் (போப் தலைமையிடம்) உச்சியிலிருந்து அஸ்தி பாரம் வரை அசைந்தது. இவ்வாறு சபையின் சரித்திரத்தில் ஒரு பிறப்புக்கு முன்பு வேதனை இருந்தது என்பது நிஜம்.

லாசருவின் கல்லறையினருகில் ஆவியில் கலங்கின இயேசு துயரமடைந் தார். "இயேசு ஆவியில் கலங்கி துயர மடைந்து அவனை எங்கே வைத்தீர்கள்? என்றார். ஆண்டவரே வந்து பாரும் என்றார்கள். இயேசு மறுபடியும் ஆவியில் கலங்கி கல்லறையினிடத்திற்கு வந்தார்..... இயேசு தம்முடைய கண்களை ஏறெடுத்து, பிதாவே நீர் எனக்குச் செவிகொடுத்தபடியினால் உம்மை ஸ்தோத்தரிக்கிறேன்" என்று ஜெபித்தார் யோவான் 11:33-34, 38,41.

"அந்தபடியே ஆவியானவரும் நமது பலவீனங்களில் நமக்கு உதவி செய்கிறார். நாம் ஏற்றபடி வேண்டிக் கொள்ள வேண்டியதின்னதென்று அறியாமலிருக்கிறபடியால், ஆவியான வர் தாமே வாக்குக்கடங்காத பெரு மூச்சுகளோடு நமக்காக வேண்டுதல் செய்கிறார். ஆவியானவர் தேவனுடைய சித்தத்தின்படியே பரிசுத்தவான்களுக் காக வேண்டுதல் செய்கிறபடியால் இருதயங்களை ஆராய்ந்து பார்க்கிறவர் ஆவியின் சிந்தை இன்னதென்று அறிவார்" ரோமர் 8:26-27.

இயேசு மன்றாட்டு ஜெபத்தில் இராமுழுவதும் செலவு செய்தார். அவர் எருசலேமைப் பார்த்து கண்ணீர் விட்டார். கெத்சமனேயில் ஜெபத்தின் மூலம் வெற்றி பெற்றார். அவர் நமது பிரதான ஆசாரியர். நம்முடைய

(5-ம் பக்கம் பார்க்க)

(4-ம் பக்க தொடர்ச்சி)

பலவீனங்களைக் குறித்து பரிதபிக்கக் கூடிய பிரதான ஆசாரியர் எபி.4:15. இப்போது அவர் தேவனுடைய வலது பாரிசத்தில் உட்கார்ந்து நமக்காகப் பரிந்து பேசிக் கொண்டிருக்கிறார். அவர் வேண்டுதல் செய்யும்படி எப்பொழுதும் உயிரோடிருக்கிறவர் எபி.7:25.

எழுப்புதலுக்குமுன் வேதனை

"சீயோனோவெனில், ஒருமிக்க வேதனைப்பட்டும், தன் குமாரரைப் பெற்றும் இருக்கிறது" ஏசா.66:8. ஆவிக்குரிய பிள்ளைகள் தேவராஜ்யத்தில் பிறப்பதற்கு முன்னால் ஆவி வேதனைப் பட வேண்டும்! கிறிஸ்துவிடம் மக்களை கொண்டு வருபவர்கள் முதலாவது ஆத்துமாக்கள் இரட்சிக்கப்பட வேண்டும் என்ற ஆவலின் வேதனையை உணர வேண்டும்.

கர்த்தர் எசேக்கியேலிடம், 'நீ எருசலேம் நகரம் எங்கும் உருவப்போய் அதற்குள்ளே செய்யப்படுகிற சகல அருவருப்புகளினிமித்தமும் பெருமூச்சு விட்டழுகிற மனுஷரின் நெற்றிகளில் அடையாளம் போடு என்றார்' எசேக்.9:4. தொடர்ந்து வந்த அழிவில் நெற்றிகளில் அடையாளம் போடப்பட்டவர்கள் பாதிக்கப்படவில்லை. **அவர்களின் இருதயங்களில் பாவம் நிறைந்த தேசத்தின் பாரம் இருந்தது.**

தேவன் நமது தேசத்திலும் உலகத்திலும் சீக்கிரமாக வரவிருக்கும் நியாயத்தீர்ப்பிலிருந்து மக்களுக்குப் பாதுகாவல் அளிக்க திறப்பின் வாயில் நிற்கும் மக்களை அழைக்கிறார். அவர் மன்றாட்டு வீரர்கள் வெளியே வந்து தங்களைப் பிரத்தியேகப்படுத்திக் கொள்ளும்படி அழைக்கிறார். "ஆனபடியால் நீங்கள் அவர்கள் நடுவிலிருந்து புறப்பட்டுப் பிரிந்துபோய், அசுத்தமானதைத் தொடாதிருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்" 2 கொரி.6:17. ஆண்டவரால் அழைக்கப்பட்ட அநேகர் கவலையீனமாக வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். மத்.22:14-ன் படி அழைக்கப்பட்டவர்கள் அநேகர், தெரிந்து கொள்ளப்பட்டவர்களோ சிலர். "ஆகையால் இனிச் சம்பவிக்கப் போகிற இவைகளுக்கெல்லாம், நீங்கள் தப்பி மனுஷகுமாரனுக்கு முன்பாக நிற்கப் பாத்திரவான்களாக எண்ணப்படுவதற்கு எப்பொழுதும் ஜெபம் பண்ணி விழித்திருங்கள்" லூக்.21:36.

பவுல் கவலையீனமாக வாழ்ந்து ஆத்தும ஆதாயம் செய்யும் நம்பிக்கையுடையவராயிருக்கவில்லை.

"சகோதரரே, அதைப் பிடித்துக் கொண்டேனென்று நான் எண்ணுகிறதில்லை. ஒன்று செய்கிறேன், பின்னானவைகளை மறந்து, முன்னானவைகளை நாடி கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப் பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடருகிறேன்" பிலி. 3:13-14. "உன்னதத்திலிருந்து நம்மேல் ஆவி ஊற்றப்படுமட்டும் அப்படியே இருக்கும்; அப்பொழுது வனாந்தரம் செழிப்பான வயல்வெளியாகும்; செழிப்பான வயல்வெளி காடாக காணப்படும்" ஏசா.32:15.

"நீங்கள் எதிர்பார்த்திருக்கும் முடிவை உங்களுக்குக் கொடுக்கும் படிக்கு நான் உங்கள்பேரில் நினைத்திருக்கிற நினைவுகளை அறிவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்; அவைகள் தீமைக்கல்ல, சமாதானத்துக்கேதுவான நினைவுகளே. அப்பொழுது நீங்கள் கூடிவந்து என்னைத் தொழுது கொண்டு, என்னை நோக்கி விண்ணப்பம் பண்ணுவீர்கள்; நான் உங்களுக்குச் செவி கொடுப்பேன். உங்கள் முழு இருதயத்தோடும் என்னைத் தேடினீர்களானால், என்னைத் தேடுகையில் கண்டுபிடிப்பீர்கள்" எரேமி.29:11-13.

தெளிந்த மனமும் சுய கட்டுப்பாடும் இல்லாவிட்டால் நாம் எதிரியின் தாக்குதலுக்குத் திறந்த நிலையிலிருக்கிறோம்.

எதிர்பார்த்திருப்பதும் அதோடு ஆயத்தமாகுதலும்

Expecting and preparing

Don Mactintyre

வேதபுத்தகத்தில் (மத்.25:1-12) பத்துக் கன்னிகைகளைக் குறித்து வாசிக்கிறோம். அவர்களில் ஐந்து பேர் புத்தியுள்ளவர்கள். ஐந்து பேர் புத்தியற்றவர்கள். புத்தியுள்ளவர்கள் மணவாளனுடைய வருகைக்கு ஆயத்தமாயிருந்தனர். அவர்கள் மந்தமாகவோ அல்லது வருகையைக் குறித்து எளிதாக எடுத்துக் கொள்ளவோ இல்லை. அவர்கள் கருத்தாக வேலைசெய்து, ஆயத்தம் செய்து தங்கள் தீவட்டிகளுக்கு தேவையானது மட்டுமல்ல கூடுதலாகவும் எண்ணெயை எடுத்துக் கொண்டார்கள்.

ஆனால் புத்தியற்றவர்கள் மணவாளனது வருகையை அறிந்திருந்தார்கள். அவர்களுடைய தீவட்டிகளிலும் எண்ணெய் இருந்தது. ஆனால் அதோடு திருப்தியடைந்துவிட்டார்கள். புத்தியுள்ளவர்களைப் போல அதிகப்படியான உழைப்புக்கும் எண்ணெய் வைத்திருப்பதற்கும் அவர்கள் எண்ணவில்லை.

மணவாளன் வர தாமதமானது! அவர்கள் அப்படி எண்ணியிருக்கவில்லை. தீவட்டிகள் அணையத் தொடங்கின. தங்கள் குறைவை உணர்ந்தார்கள். கடைசி நேர முயற்சி பலனளிக்கவில்லை. மிகவும் தாமதமாகி விட்டது. எண்ணெய் பெற்றுக்கொள்ள கடைவீதிக்கு ஓடினார்கள். ஆனால் அவ்வேளையில் மணவாளன் வந்து விட்டார். அவர்கள் நீண்ட நேரம் காத்திருந்தும் இப்போது எதிர்பாராத நேரத்தில் மணவாளன் வந்து விட்டார். கதவு அடைக்கப்பட்டு விட்டது. ஆயத்தமாயிருந்த ஐந்து புத்தியுள்ள கன்னிகைகள் உள்ளே பிரவேசித்தார்கள். இவர்களோ கைவிடப்பட்டு விட்டார்கள்.

ஆயத்தமாவதற்குத் தூண்டுதல்

தாமதிக்கிறார் என்று சிலர் எண்ணுகிறபடி, கர்த்தர் தமது வாக்குத்தத்தத்தைக் குறித்துத் தாமதமாயிராமல்; ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்ப வேண்டுமென்று விரும்பி, நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார். கர்த்தருடைய நாள் இரவிலே திருடன் வருகிறவிதமாய் வரும்; அப்பொழுது வானங்கள் மடமட என்று அகன்றுபோம், பூதங்கள் வெந்து உருகிபோம், பூமியும் அதிலுள்ள கிரியைகளும் எரிந்து அழிந்துபோம். இப்படி இவைகளெல்லாம் அழிந்து போகிறதாயிருக்கிறபடியால் நீங்கள் எப்படிப்பட்ட பரிசுத்த நடக்கையும் தேவபக்தியும் உள்ளவர்களாயிருக்க வேண்டும்! தேவனுடைய நாள் சீக்கிரமாய் வரும்படிக்கு, மிகுந்த ஆவலோடே காத்திருங்கள்; அந்த நாளில் வானங்கள் வெந்து அழிந்து, பூதங்கள் எரிந்து உருகிப்போம். அவருடைய வாக்குத்தத்தத்தின்படியே நீதி வாசமாயிருக்கும் புதிய வானங்களும், புதிய பூமியும் உண்டாகுமென்று காத்திருக்கிறோம். ஆகையால் பிரியமானவர்களே, இவைகள் வரக் காத்திருக்கிற நீங்கள் கறையற்றவர்களும் பிழையற்றவர்களுமாய்ச் சமாதானத்தோடே அவர் சந்நிதியில் காணப்படும்படி ஜாக்கிரதையாயிருங்கள் 2 பேதுரு.3:9-14.

அவருக்கு முன்பாக சமாதானத்துடனும் கறை திரையற்றவர்களுமாகக் காணப்பட எவ்வளவு ஜாக்கிரதையாயிருக்க வேண்டும்?

நீங்கள் ஆயத்தமாகிக் கொண்டிருக்கிறீர்களா?

இந்த மிகப்பெரிய நிகழ்வுக்காக நீங்கள் ஆயத்தமா? தினந்தோறும் தேவனைத் தேடி, அவர் உங்களை ஆயத்தப்படுத்தி, சுத்திகரித்து, கறைதிரையற்றவர்களாகவும் அவரது ஆவியினால் உங்களை நிரப்பவும், அதன் மூலம் உங்கள் வாழ்வில் அவரது கனி மலரவும் இடங்கொடுப்பீர்களா? அநித்தியமான உலக சந்தோஷங்களை தள்ளிவிட்டு, பரலோக நித்திய காரியங்களைப் பற்றிக் கொள்வீர்களா?

உங்கள் ஆத்துமா பரலோகம் செல்ல ஆயத்தமாகுமானால், உங்கள் இருதயம் அங்கிருக்குமானால், கிறிஸ்துவுக்குரிய காரியங்கள் முக்கியத்துவம் பெற்று, உங்கள் கவனம் உங்கள் சமயம், வலிமை, முயற்சி, எண்ணங்கள் ஆகியவை அந்தத் திசையிலேயே காணப்படும். அதனால் இவ்வுலக காரியங்கள் முக்கியத்துவமற்றவைகளாகிவிடும்.

இவைதான் ஆயத்தமாயிருக்கிறவர்களின் அடையாளங்கள். **அவர்களது ஜெபவாழ்வு பெருகும். இயேசுவோடு செலவிடும் நேரங்கள் விருப்பம் நிறைந்தவைகளாகவும், வாஞ்சிக்கப்படுகிறவைகளாகவும், பக்திரமாகப் பாதுகாக்கப்படுகிறவைகளாகவுமிருக்கும்.** தேவனைக் குறித்த புத்தகங்கள் பிற புத்தகங்களை ஒதுக்கிவிடும். வேதத்தை தியானிக்கும் காலம் புத்துணர்ச்சியும் புதுபெலனும் தருவதோடு, கிறிஸ்துவை அறிகிற அறிவில் பெருகச்செய்யும். வேதபுத்தகம் உயிருள்ளதாக உணரப்படும். அது அவர் கள் மனதில் ஊடுருவிச்

(6-ம் பக்கம் பார்க்க)

(5-ம் பக்க தொடர்ச்சி)

செல்லும். எனவே அறிவடையவும் உற்சாகமடையவும் நாள்தோறும் மாற்றங்களை ஏற்படுத்தி, ஆயத்தப் படுத்தவும் ஏதுவாகும்.

ஆயத்தமானவர்களின் இருதயம் தேவனால் நிறைந்திருக்கும். தேவன் மேலுள்ள வாஞ்சையால் நிறைந்து இவ்வுலகுக்கே தூய ஆவியானவரை தேவன் ஊற்றும்படியாகவும் அதன் மூலம் நல்ல அறுவடை ஏற்படும்படி யாகவும் எதிர்பார்த்திருப்பார்கள். அவர் களுடைய ஜெபங்களில் அன்பானவர் கள், அறிமுகமானவர்கள், உடன் பணி யாட்கள், அயலகத்தார் அனைவரு டைய பெயருமிருக்கும். **அவர்கள் இன்னும் ஆண்டவரை அரியவில்லையே என்ற தாகத்தோடு அவர்களுக்காக ஜெபிப்பார்கள்.** அவர்கள் மேல் தேவன் இரக்கம் காண்பிக்கவும் பரலோ கத்தின் தேவன் அவரது ராஜ்யத்துக்கு அவர்களை ஆயத்தப்படுத்தவும் ஜெபிப் பார்கள்.

தேவன் தமது சபையாகிய மணவாட்டியை கலியாணத்திற்காக ஆயத்தப்படுத்துகிறார்!

நாம் கவனமாக ஜெபத்தோடு நமது தற்கால வாழ்வை ஆராய்ந்து பார்ப் போம். கடந்த காலத்தில் ஒரு சமயம் நாம் தேவனோடுள்ள அனுபவத்தைப் பெற்றி ருக்கலாம். ஆனால் இன்று எப்படியிருக்கி றோம். குயவன் கைக்களிமண்ணாய், அவரது கரம் நம்மை வடிவமைப்பதை யும், நம்மில் கிரியை செய்வதையும், நமது எதிர்பார்ப்புக்கு மாறாக உருவாக்குவதை யும் உணருகிறீர்களா? கிறிஸ்துவைப் போல நம்மை அவர் ஆக்குகிறார்.

ஒவ்வொருநாளும் இன்னும் அதிகமாக அவரோடு நெருங்குகிறோமா? தேவனுக்குரிய காரியங்கள், ஜெபம், தேவவசனம், மனிதருக்குச் செய்யும் சேவை ஆகியவை அதிக முக்கியம் என்று நமக்குத் தோன்றுகிறதா? இவ்வுலக காரியங்கள் சிந்தையிலிருந்து மங்கிப் போகிறதா? நேர்மையுடன் ஆராய்ந்து பாருங்கள்.

ஒருவேளை இவைகளில் நீங்கள் குறைவுபட்டு ஆயத்தமற்றவர்களாக காணப்பட்டாலும் சோர்ந்து போக வேண்டாம். யாரும் கெட்டுப் போவதை தேவன் விரும்புவதில்லை. அனைவரும் மனந்திரும்பி ஜீவனைப் பெற்று கொள்வதே அவரது விருப்பம். தேவன் ஆரம்பிக்க விரும்புவது போல ஆரம்பி யுங்கள். மனந்திரும்புங்கள். சோம்பல், பரலோகம் ஆத்துமா இவற்றைக் குறித்த நிர்விசாரம் இவற்றிலிருந்து திரும்புங்கள். நேராகக் காலடி எடுத்து வையுங்கள். அவருடைய வசனத்தின் மூலம் உங்களை பரிசுத்தப்படுத்தி, ஆயத்தப்படுத்தவும், உங்கள் குறைகள், தவறுகள், குற்றங்கள் ஆகியவற்றை உங்களுக்குத் திறந்து காண்பிக்கவும் தேவனிடம் கேளுங்கள்.

கோபம், மன்னியாமை ஆகியவை எவ்வாறு ஜெபிப்பதைத் தடுக்கின்றன என்பதைப் பிள்ளைகளுக்குப் போதிக்க வேண்டும்

குறிப்பாக அவையெல்லாவற்றிலு மிருந்து உங்களைக் கழுகி சுத்தப்படுத்தி, கிறிஸ்துவைப் போலாக்க மன்றாடுங்கள்.

உங்கள் இருதயம் சுத்தமாயிருக் கட்டும். அவரது ஆலயத்திற்கு தகுதியான பாத்திரமாகவும், அவரது ஆவி தங்கும் இடமாகவும் அதை அவர் ஆயத்தப்படுத் தட்டும். "கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப் பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடருகிறேன்." "நாம் நம்பியிருக்கிற ஆனந்த பாக்கியத்துக்கும், மகா தேவனும் நமது இரட்சகருமாகிய இயேசுக் கிறிஸ்து வினுடைய மகிமையின் பிரசன்னமாகு தலுக்கும், எதிர்பார்த்துக் கொண்டிருக் கும்படி நமக்குப் போதிக்கிறது. அவர் நம்மை சகல அக்கிரமங்களினின்றும் மீட்டுக் கொண்டு, தமக்குரிய சொந்த ஜனங்களாகவும், நற்கிரியைகளைச் செய்ய பக்திவைராக்கியமுள்ளவர்களாக வும் நம்மைச் சுத்திகரிக்கும்படி, நமக் காகத் தம்மைத் தாமே ஒப்புக்கொடுத் தார்" *தீத்து.2:13-14.*

"நாம் வேண்டிக் கொள்ளுகிற தற்கும் நினைக்கிறதற்கும் மிகவும் அதிக மாய் நமக்குள்ளே கிரியை செய்கிற வல்லமையின்படியே, நமக்குச் செய்ய வல்லவர்" *எபேசி.3:20.*

இந்த கடைசி நாட்களில் குடும்ப ஜெபம்

Family prayer in the Last days

Kim Butts

"எல்லாவற்றிற்கும் முடிவு சமீப மாயிற்று; ஆகையால் தெளிந்த புத்தி யுள்ளவர்களாயிருந்து, ஜெபம் பண்ணு வதற்கு ஜாக்கிரதையுள்ளவர்களாயிருங் கள்" *1 பேதுரு. 4:7.*

தூய ஆவியானவரின் தூண்டு தலால் பயனுள்ள வாழ்வு வாழ இக் கடைசி காலத்தில் ஜெபமே ஆதாரம் என்று பேதுரு வற்புறுத்திக் கூறுகிறார். நமக்கு முன்னாலிருக்கும் தடைகளை எதிர்க்க நமது ஜெப வாழ்வு வல்லமை யுள்ளதாகவும் பயனளிப்பதாகவும் இருக்கக் கர்த்தர் விரும்புகிறார். தெளிந்த மனதுள்ள கிறிஸ்தவ குடும்பங்கள் தெளிவான நோக்கம் நிறைந்தவர்களா கவும், ஞானமுள்ள தெரிவு செய்கிறவர் களாகவும் பக்குவமடைந்த தீர்மானங் களை எடுக்கிறவர்களாகவும் இருக்க வேண்டும். அதற்கு ஜெபத்தின் மூலம் இயேசுவுடன் நல்ல தொடர்பு இருக்க வேண்டும். நமது உள்ளங்கள் நமது பயனற்றதும் அளவுக்கடந்ததுமான கலாச்சாரங்களில் சிக்கியிருந்தால் சத்துரு அதை தனது வெற்றிக்காக எளிதில் பயன்படுத்திக்கொள்வான். ஏனெனில் அவை நம்மை கிறிஸ்து நமக்கு முன் வைத்திருக்கும் பாதையை விட்டு விலகச் செய்கின்றன.

நாம் ஜெபிப்பதற்கு சுய கட்டுப் பாடு உள்ளவர்களாயிருக்க வேண்டு மென்று பேதுரு கூறுகிறார். சுயக்கட்டுப் பாடு கடினமான ஒன்றுதான், நம்மைக் கட்டுப்பாட்டில் வைத்திருப்பது யார்? நமக்கு இன்னது நன்மை என்று அறிந்து செயல்படுபவரும் நம்மை நேசிப்பவரு மாகிய பிதாவாகிய தேவனா? அல்லது நம்மை அழிப்பதற்காகக் காத்திருக்கும் சத்துருவாகிய சாத்தானா? குடும்பமாக எந்த செயல் பாடுகளிலும் பழக்கங்களி லும் ஈடுபட்டு அவற்றை இறுக்கமாகப் பிடித்திருக்கிறீர்கள்? தேவனுடைய கட்டுப்பாட்டில் அவைகளை நீங்கள் செய்வதால் தேவ நாமம் மகிமைப் படுகிறதா? அல்லது நமது பரமதந்தைக்கு விருப்பமில்லாத காரியங்களில் பிசாசின் வலையில் சிக்கியிருக்கிறீர்களா?

சத்துரு நம்மை பலவீனப்படுத்த வும், கவனத்தைச் சிதறடிக்கவும் அழிக்க வும் பயன்படுத்தும் வழி நம்மை ஜெபிக் காமல் தடுப்பது. குறிப்பாகக் குடும்பமாக ஜெபிக்காமலிருக்கச் செய்வது. சுய அடக்கம் இல்லாவிட்டால் லௌகீக காரியங்களிலும் தேவனற்ற வேட்கை களிலும் ஈடுபட வேண்டியதாகும். அதன் விளைவாக, நாம் ஜெபிக்க மனமற்றவர் களாகவும், விழிப்பற்றவர்களாகவும், ஜாக்கிரதையற்றவர்களாகவும் ஆகிவிடு வோம். "தன் ஆவியை அடக்காத மனுஷன் மதிலிடிந்த பாழான பட்டணம் போலி ருக்கிறான்" *நீதி.25:28.* மதிலிடிந்துவிடுவது பாதுகாவலற்றதும் எதிரி உள்ளே நுழை வதற்கு ஏதுவான ஒரு நிலையாகும். தெளிந்த மனமும் சுய கட்டுப்பாடும் இல்லாவிட்டால் நாம் எதிரியின் தாக்கு தலுக்குத் திறந்த நிலையிலிருக்கிறோம்.

உங்கள் குடும்பத்தைச் சுற்றிலும் மதில் கட்டப்பட்டு பாதுகாவலான நிலை யிலிருக்கிறீர்களா? ஒருவரோடொருவர் சேர்ந்தும், ஒருவருக்காக இன்னொரு வரும் ஜெபிக்கிறீர்களா? யாக்.5:13-16 வசனங்களில் கூறப்பட்டது போலவும் கிறிஸ்துவைப் போலவும் நடந்து கொள் ளுகிறீர்களா?

சுய அடக்கம் இல்லாவிடில் நமது ஜெபவாழ்வு, பெலவீனமாகவும், தவறு நிறைந்ததாகவும் வல்லமையற்றதாகவு மிருக்கும். அது ஆண்டவருக்குப் பயனில் லாத வாழ்வு. அவரது ஆதரவோடு நமது வாழ்வின் அனைத்துப் பகுதிகளையும் கட்டுப்பாட்டில் வைத்திருப்போமா னால் நமது ஜெபங்கள் வல்லமை நிறைந்தவைகளாகவும் பயனளிக்கிறவை களாகவுமிருக்கும். "தேவன் நமக்குப் பய முள்ள ஆவியைக் கொடாமல் பலமும் அன்பும் தெளிந்த புத்தியுமுள்ள ஆவி யையே கொடுத்திருக்கிறார்" *2 தீமோ.1:7.*

ஜெபத்தைக் குறித்த சில கட்ட ளைகள் கீழே தரப்பட்டுள்ளன. குடும்ப மாக அவைகளை வாசித்து தியானிப்பீர் களானால் நீங்கள் தெளிந்த புத்தியும் சுய அடக்கமுமுள்ளவர்களாய் ஜெபிக்க முடியும் சோதனையில் விழுந்துவிடாத படி ஜெபிக்க வேண்டும்.

சத்துருவிடமிருந்து நம்மைப் பாதுகாத்துக் கொள்ள ஆண்டவர் நமக்குத் தந்த வழி ஜெபம் என்பது

(7-ம் பக்கம் பார்க்க)

(6-ம் பக்க தொடர்ச்சி)

சத்தியம். நாம் தெளிந்த புத்தியும் சுய அடக்கமுமில்லாதவர்களாயிருந்தால் எளிதாக சத்துருவின் வலையில் சிக்கி விடுவோம். அதனால்தான் இயேசு : "நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம் பண்ணுங்கள்; ஆவி உற்சாகமுள்ளதுதான்; மாம்சமோ பலவீனமுள்ளது" என்றார். இந்தக் கடைசி நாட்களில் நாம் ஜெபத்தோடு விழித்திருப்பது மிகவும் அவசியம். கோபம், மன்னியாமை ஆகியவை எவ்வாறு ஜெபிப்பதைத் தடுக்கின்றன என்பதைப் பிள்ளைகளுக்குப் போதிக்க வேண்டும் 1 மாற்.11:25. சோதனைக்குரிய காரியங்களைக் குடும்பமாக உட்கார்ந்து பட்டியலிட வேண்டும். அவைகளுக்காக விழித்திருந்து ஜெபிக்க வேண்டும். ஒருவருக்காக ஒருவர் ஜெபிக்கும்படி குடும்பமாக உடன்படிக்கை செய்து ஜெபிப்பது சோதனைகளை மேற்கொள்ள ஏதுவாயிருக்கும்.

அனைவரும் இரட்சிக்கப்படும்படி ஜெபிக்க வேண்டும்

1 தீமோ.2:1-4 வசனங்கள் இழந்து போன மக்களைத் தேவ ராஜ்யத்தில் கொண்டு வர ஆதி காரணமாயிருப்பது ஜெபம் என்று படிக்கிறோம். நம்மைத் துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும், கடினமாய் நடத்துகிறவர்களுக்காகவும் கூட நாம் கீழ்ப்படிதலோடு ஜெபிக்க வேண்டும் (மத்.5:44, லூக்.6:28 படிக்க.) நம்முடைய அதிகாரிகளுக்காக ஜெபிப்பதும் மிகவும் அவசியம். அரசாங்க அதிகாரிகள், உடன் வேலையாட்கள், ஆசிரியர்கள் போன்றவர்களுக்காகவும் ஜெபிப்போம். நமக்கு அறிமுகமானவர்கள், அயலகத்தார், நண்பர்கள், உறவினர்கள் யார் யார் இன்னும் ஆண்டவரை ஏற்றுக்கொள்ளவில்லையோ அவர்களை வரிசையாகக் குறித்து வைத்து ஜெபிக்க வேண்டும்.

உத்தம ஜெபம் ஏறெடுக்க உங்களை அர்ப்பணியுங்கள்

"இடைவிடாமல் (அர்ப்பணிப்புடன்) ஜெபம் பண்ணுங்கள், ஸ்தோத்திரத்துடன் ஜெபத்தில் விழித்திருங்கள்" கொலோ.4:2. நமக்கு நன்றியுள்ள இருதயம் இருந்தால் நமது உள்ளம் சத்துருவின் திட்டங்களைக் குறித்து விழிப்புடனிருக்கும். ஆகவே ஜெபத்தை உத்தமமாய் கடைபிடிக்க தவற மாட்டோம். "நம்பிக்கையிலே சந்தோஷமாயிருங்கள்; உபத்திரவத்திலே பொறுமையாயிருங்கள்; ஜெபத்திலே உறுதியாய் தரித்திருங்கள்" ரோமர் 12:12 ஒவ்வொரு நாளும் தனியாகவும் குடும்பமாகவும் ஜெபிக்க சமயம் ஒதுக்குவதற்கு இந்தக் கட்டளைக்குக் கீழ்ப்படியுங்கள். பிதா உங்கள் உத்தமத்திற்கேற்ற பலனைத் தருவார். இப்படி ஒரு சமயத்தைக் கண்டுபிடிப்பது கடினமாயிருந்தால் குடும்பமாக உட்கார்ந்து ஜெபத்திற்குத் தடையாயிருப்பவற்றைக் கண்டு பிடியுங்கள். ஏதோ சிறு மாற்றங்கள் செய்வதால் சேர்ந்து ஜெபிக்க சமயம் கண்டு பிடிக்க முடியும். ஒருவேளை தொலைக்காட்சி முன் உட்காரும் சமயத்தையோ அல்லது கம்ப்யூட்டர் அல்லது மடிகணினியின் முன் செலவிடும் சமயத்தையோ குறைக்க வேண்டிய தாகும். ஜெபத்தைக் காட்டிலும் இவைகளுக்கு அதிகம் சமயம் செலவழிக்கக் கூடாது. பிற காரியங்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பதில்லை என்று நல்ல தீர்மானம் செய்யுங்கள்.

இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள் ஏனெனில் அது உங்களுக்கான தேவசித்தம்

"எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள். இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள். எல்லாவற்றிலேயும் ஸ்தோத்திரம் செய்யுங்கள். அப்படி செய்வதே கிறிஸ்து இயேசுவுக்குள் உங்களைக் குறித்து தேவனுடைய சித்தமாயிருக்கிறது" 1 தெச.5:16-18. எப்போதும் சந்தோஷமாயிருப்பதும், கடினசூழல்களில் ஸ்தோத்திரம் செய்வதும் எளிதல்ல. ஆனால் சந்தோஷமாயிருக்கவும் ஸ்தோத்திரம் செலுத்தவும் தேவன் சொல்லக் காரணம் என்ன? ஏனென்றால் முரடானதும் கடினமானதுமான பாதைகள்தான் நம்மை பெலமுள்ளவர்களாக்கும். ஜெபத்தின் மூலம் அந்த கார சூழல்களிலும் அவர் வெற்றிதர முடியும். எனவே குடும்பத் தின் பிள்ளைகளைக்குறித்த அனைத்துக் கவலைகளையும் கடினங்களையும் ஏமாற்றங்களையும், துக்கங்களையும் அவரது பாதத்தில் வைத்துவிட்டால் அவர் சமாதானம் அருளி நமது இருதயங்களையும் சிந்தைகளையும் காத்துக்கொள்வார்.

குடும்ப ஜெபம்

பிதாவே, இந்த கடைசி நாட்களில் நாங்கள் தெளிந்த புத்தியுடையவர்களாயிருக்க உதவி செய்யும். ஞானத்தோடும் ஒரு நோக்கத்தோடும் நாங்கள் வாழ நீர் உதவிசெய்யும். எந்த இடத்தில் நாங்கள் சுயகட்டுப்பாட்டை இழந்திருக்கிறோமோ அதனைக் காண்பித்து சத்துருவுக்கு எதிர்த்து நிற்கக் கிருபை செய்யும். உம்முடைய இருதயத்தை அறிந்து அதற்கேற்றபடி ஜெபிக்க கிருபை தாரும். உம்முடைய இருதயத்தை அறிந்து அதற்கேற்றபடி ஜெபிக்க உதவி புரியும். வல்லமையான ஆவியால் நிரப்பப்பட்ட ஜெப வாழ்வை வாஞ்சிக்கிறோம். ஏனெனில் அது இக்கடைசி நாட்களில் உமக்கு மகிமையைக் கொண்டுவரக்கூடும். நாங்கள் ஜெபிக்கக் கற்றுத் தருவீராக. அன்பின் ஆண்டவரே, இயேசுவின் நாமத்தில் ஆமென்.

கிறிஸ்துவின் வருகை நெருங்கி வருவதால் எல்லாவற்றையும் அவருக்காக அர்ப்பணிப்போம்

All for Christ as His return approaches

Rich Carmicheal

இந்த இக்கட்டான கால கட்டத்தில் அவருடைய பிள்ளைகளாகிய நமக்கு மிகவும் அதிகமான பொறுப்பு உண்டு என்பதை இந்தச் செய்தி அறிவிக்கிறது. வேத அடிப்படையிலும் கடந்த கால சரித்திரத்திலும் நாம் பார்க்கும்போது, காலாகாலங்களில் ஏற்பட்ட இக்கட்டான நிலைமைகளில் ஆண்டவர், தமது ஜனங்களை அல்லது குறிப்பிட்ட நபர்களை நம்பிக்கையும் விடுதலையும் அளிக்கும் கருவிகளாக பயன்படுத்தியிருக்கிறார் என்பதைக் காணமுடிகிறது. யோசேப்பு, எலியா, நெகேமியா, எஸ்றா, எஸ்தர், தானியேல் மற்றும் ஆதிகால கிறிஸ்தவர்களை எடுத்துக்காட்டாகக் குறிப்பிடலாம். அவர்கள் தங்களில் திறமையுடையவர்கள் என்பதாலல்ல, ஆனால் அவர்களில் காணப்பட்ட ஜீவனுள்ள தேவன் மேலுள்ள விசுவாசம் மற்றும் அவருக்காக பயன்பட வேண்டும் என்ற விருப்பமுமே அவர்கள் கடின சூழல்களில் பயன்படுத்தப்படகாரணம். அவர்கள் நம்மைப் போல பாடுள்ள மனுஷர்தான், ஆனால் கர்த்தருக்குள் தைரியமும் பெலனும் பெற்று அவரது நோக்கத்திற்காகத் தங்கள் ஜீவனையும் அர்ப்பணிக்க ஆயத்தமாயிருந்தனர். எனவே ஆண்டவர் தமது பலத்த சத்துவத்தாலும், அவரது உத்தமத்தாலும் அவர்கள் மூலமாகக் கிரியை செய்து தேவையான உதவி, விடுதலை ஆகியவற்றை மக்களுக்குக் கொடுத்தார்.

நமக்கு நன்றியுள்ள இருதயம் இருந்தால் நமது உள்ளம் சத்துருவின் திட்டங்களைக் குறித்து விழிப்புடனிருக்கும். ஆகவே ஜெபத்தை உத்தமமாய் கடைபிடிக்க தவற மாட்டோம்.

கிறிஸ்துவின் வருகை மிக சமீபம்

கடந்துபோன தலைமுறையினரும், பல நெருக்கடிகளைச் சந்தித்திருந்தாலும் இன்று நாம் சந்திக்கும் ஆபத்தான நிலை மிகவும் கொடியது. ஆண்டவரின் வருகை மிக சமீபம் என்று நாம் உணரவில்லையா? கோணலும் மாறுபாடுமான சந்ததியின் நடுவில் ஜீவ வசனத்தைப் பிடித்துக்கொண்டு சுடர்களைப் போல பிரகாசிக்க இன்னும் எவ்வளவு காலம் தான் இருக்கிறது (பிலி.2:14-15) ஜெபிக்கவும், உபவாசிக்கவும், தேவ வசனத்தைப் பகிர்ந்து கொள்ளவும், இழந்து போனவர்களை தேடிப்பிடிக்கவும், சபையை சுத்திகரிக்கவும் இன்னும் எவ்வளவு காலமிருக்கிறது! கீழ்க் குறிப்பிடப்படும் வேதவசனங்கள் இக்கால கட்டத்தில் படிப்பதற்கு தகுதியான முக்கியத்துவம் வாய்ந்தவை :-

ரோமர்.13:11-12; 1 தெச.5:4,6; எபி.10:24-25; 1 பேது.4:7-11 இவ்வசனங்களைப் படியுங்கள்.

செய்தி தெளிவாயிருக்கிறது. கடைசி நாட்களின் சம்பவங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. கிறிஸ்து விரைவில் வரப்போகிறார்! நன்றாய் விழித்திருக்கவும், அக்கரையுடனும், விழிப்புடனும், ஜெபத்துடனும், ஊக்கமான அன்புடனும் நமது கரத்தில் ஒப்படைக்கப்

(8-ம் பக்கம் பார்க்க)

(7-ம் பக்க தொடர்ச்சி)

பட்டிருக்கும் ஊழியத்தில் உத்தமத் துடன் இருக்க வேண்டிய காலம் இது. ஆண்டவரையே நோக்கிப் பார்த்து, அவரது ஆவியை சார்ந்துகொண்டு, அவரது கிருபை, அவரது வசனம், அவரது பெலன் ஆகியவற்றின் மூலம் வாழவும் சேவை செய்யவும் நம்மை அர்ப்பணிக்க வேண்டிய காலம் இது. நமது சொந்த பெலன் போதுமானவையல்ல. ஆனால் நமது தேவனிடம் எல்லாம் தாராளம்! "உம்மாலே நான் ஒரு சேனைக்குள் பாய்ந்து போவேன்; என் தேவனாலே ஒரு மதிலைத் தாண்டுவேன்" சங்.18:29. "என்னை பெலப்படுத்துகிற கிறிஸ்து வினாலே எல்லாவற்றையுஞ் செய்ய எனக்குப் பெலனுண்டு" பிலி.4:13. "கர்த்தராகிய ஆண்டவருடைய வல்லமையை முன்னிட்டு நடப்பேன்" சங்.71:16. "கர்த்தரிலும் அவருடைய சத்துவத்தின் வல்லமையிலும் பலப்படுங்கள்" எபேசி.6:10.

ஆவிக்குரிய போராட்டம்

எபேசி.6:10-18 வசனங்களில் பவுல் நம்மைச் சுற்றி நடைபெறும் சகல விதமான போராட்டங்களையும் குறித்து ஞாபகப்படுத்துகிறார். இன்றைய குழப் பங்களுக்குப் பின்னாலிருப்பது பொல் லாத ஆவிகள் என்று W.C. மூர் என்பவர் குறிப்பிடுகிறார். அதைக்குறித்து எபேசி.6:12 விளக்குகிறது. கிறிஸ்துவின் வருகை நெருங்க நெருங்க அந்தகார சக்திகளும் உச்சநிலைக்கு வருகின்றன. பிசாசின் இரு முக்கிய அடையாளங்கள்: அவன் பொய்யன் (யோவா.8:44) மற்றும் அழிக் கிறவன் (யோவா.10:10) எனவே இதற்கு எதிராகப் போராட சர்வாயுத வர்க்கத் தைத் தரித்துக்கொண்டு ஆயத்தமாக நிற்க வேண்டும். நமது பெலன் ஆண்ட வரிடமுள்ளது.

ஜெபத்தில் விழிப்பு

நமது ஆவிக்குரிய போராட்டத் திற்கு மிகவும் இன்றியமையாதது ஜெபம் என்றால் மிகையல்ல. "எந்தச் சமயத் திலும் சகலவிதமான வேண்டுதலோடும் விண்ணப்பத்தோடும் ஆவியினாலே ஜெபம் பண்ணி, அதன் பொருட்டு மிகுந்த மன உறுதியோடும் சகல பரிசுத்த வான்களுக்காகவும் பண்ணும் வேண்டுத லோடும் விழித்துக் கொண்டிருங்கள்" எபேசி.6:18.

பேதுரு கடைசி நாட்களின் ஜெபத்தைக் குறித்து "எல்லாவற்றிற்கும் முடிவு சமீபமாயிற்று. ஆகையால் தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருந்து, ஜெபம் பண்ணுவதற்கு ஜாக்கிரதை யுள்ளவர்களாயிருங்கள்" 1 பேது.4:7 என்று குறிப்பிடுகிறார். இந்த தேவை மிகுந்த காலகட்டத்தில் ஜெபத்தின் மூலம் தேவன் தலையிடுவதைத் தவிர வேறு வழியில்லையே. அவ்வாறு ஜெபத் தின் மூலம் நாம் அவரை நோக்கிப் பார்க்கும் போது அவருக்குக் கடின மானது என்று ஒன்றுமே இல்லை. "உம்மாலே செய்யக்கூடாத அதிசயமான காரியம் ஒன்றுமில்லை" எரேமியா 32:17.

"ஜெபம் தேவனை போல அளவிடப்பட முடியாதது. ஏனெனில் தேவன் அதன் பின்னாலிருக்கிறார்; ஜெபம் தேவனைப் போல வல்லமை யுடையது. ஏனெனில் அவர் தாமே அதற்குப் பதிலளிக்கத் தம்மை ஒப்புக் கொடுத்திருக்கிறார்" என்று **லியோனார்டு ரேவன்ஹில்** தமது நூலில் குறிப்பிட் டுள்ளார்.

மேலும் முற்கால சபைகளின் தந்தை என்று அழைக்கப்பட்ட ஜாண் **கிறிஸோஸ்டெம்** என்பவரின் மேற் கோளை **ரேவன்ஹில்** எடுத்துக் கூறு கிறார். "ஜெபத்தின் வல்லமை அக்கினி யின் பெலனை அடக்கிவிட்டது; சிங்கங் களின் மூர்க்க வாயை அடைத்துப் போட்டது, அராஜகத்தை அமைதிப் படுத்தியது, யுத்தங்களை ஓயப் பண்ணி விட்டது, பிசாசுகளை துரத்திவிட்டது, மரணத்தின் சங்கிலிகளை உடைத்துப் போட்டது, பரலோக வாசல்களை அகல மாக்கினது, வியாதிகளைப் போக்கியது, ஏமாற்றுகிறவர்களை விரட்டியடிக்கிறது, நகரங்களை அழிவினின்று பாதுகாத்தது, சூரியன் அதன் நிலையில் நிற்கும்படி செய்தது, இடி முழக்கங்களைக் கட்டுப் படுத்தியது".

மேலே குறிப்பிடப்பட்ட ஜெபத் தின் வல்லமை குறித்து மறுபடியும் படியுங்கள். இத்தகைய வல்லமை தானே இன்று நமக்குத் தேவை. நாம் நமது இருதயங்களை ஊற்றி சர்வ வல்லவரும், இரக்கம் நிறைந்தவருமான தேவனை நோக்கி ஜெபிப்போம். அவர் ஜெபத் தைக் கேட்டு வல்லமையாக நமது நாட் களில் செயல்படட்டும்.

மனந்திரும்புதல்

நமது வாழ்வில் முழுமையானதும் நேர்மையானதுமான மனந்திரும்புதல் மிகவும் தேவை. நம்மைச் சுற்றிலும் பாவம் நெருங்கி நிற்கும்போது, எல்லா விதத்திலும் நமது வாழ்வு தேவனுக்கு ஏற்புடையதாயிருக்கிறதா? நம்மை நிதானித்து அறியும் ஆண்டவர் நம்மை ஆராய்ந்து பார்க்கும்படி நம்மை ஒப்பு விக்கவும் அழைக்கப்படுகிறோம். ".....பாரமான யாவற்றையும், நம்மை சுற்றி நெருங்கி நிற்கிற பாவத்தையும் தள்ளி விட்டு, விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத் தில் பொறுமையோடே ஓடக்கட வோம்" எபி.12:1. கிறிஸ்துவின் வருகைக் காக நாம் முற்றிலும் ஆயத்தமாயிருக் கவும், அவரது மகிமைக்காக வாழவும், ஊழியம் செய்யவும் அழைக்கப்படு கிறோம். "உங்கள் இருதயங்கள் பெருந் திண்டியினாலும், வெறியினாலும் லௌகீக கவலைகளினாலும் பாரமடை யாதபடிக்கும், நீங்கள் நினையாத நேரத்தில் அந்த நாள் உங்கள் மேல் வராதபடிக்கும் எச்சரிக்கையாயிருங்கள். பூமியிலெங்கும் குடியிருக்கிற அனைவர் மேலும் அது ஒரு கண்ணியைப் போல வரும். ஆகையால் இனி சம்பவிக்கப் போகிற இவைகளுக்கெல்லாம் நீங்கள் தப்பி, மனுஷகுமாரனுக்கு முன்பாக நிற்கப் பாத்திரவான்களாக எண்ணப் படுகிறதற்கு எப்பொழுதும் ஜெபம் பண்ணி விழித்திருங்கள் என்றார்" லூக்.21:34-36.

நமக்கு மிகவும் நல்லவைகளைத் தர ஆண்டவர் கிருபையாய் ஆசிக்கிறார். நாம் பாவத்திலிருந்துவிடாமல் அவ ரோடுள்ள ஐக்கியத்தில் நிலைத்திருந்து அவரது வருகைக்காக ஆயத்தமா யிருப்பது அவரது விருப்பம். நம்மீதுள்ள அன்பால் நாம் மனந்திரும்பும்படி நம்மை அவர் அழைக்கிறார். "நான் நேசிக்கிறவர் களெவர்களோ, அவர்களைக் கடிந்து கொண்டு சிட்சிக்கிறேன்; ஆகையால் நீ ஜாக்கிரதையாயிருந்து மனந்திரும்பு" வெளி.3:19. அவருடைய சத்தத்திற்கு கீழ்ப்படிவோம். மனதைக் கடினப்படுத்த வேண்டாம்.

உங்கள் ஆத்துமா பரலோகம் செல்ல ஆயத்தமாகுமானால், உங்கள் இருதயம் அங்கிருக்குமானால், கிறிஸ்துவுக்குரிய காரியங்கள் முக்கியத்துவம் பெற்று, உங்கள் கவனம் உங்கள் சமயம், வலிமை, முயற்சி, எண்ணங்கள் ஆகியவை அந்தத் திசையிலேயே காணப்படும்.

Contact:

VARUKAYIN THOOTHAN
7, Newport Street, W.C.C. Road,
Nagercoil - 629 001.
Kanyakumari District,
SOUTH INDIA.

Mobile: +91 095432 21008
Whatsapp: +91 094897 40295
email: varukayinthoothan@hotmail.com

சிந்தனைக்கு

இருண்ட உலகிற்கு வெளிச்சம் கொடுப்பதற்காகவே தேவன் சபையை வடிவமைத்தார்.

சிலுவையிலறையப்பட்டவன் திரும்பிச் செல்ல முடியாது. அவன் அர்ப்பணிக்கப் பட்டுவிட்டான். தான் என்ன செய்யப்போகிறேன் என்பதை அவன் தீர்மானிக்க முடியாது.

சிறு மாற்றங்கள் செய்வதால் சேர்ந்து ஜெபிக்க சமயம் கண்டு பிடிக்க முடியும். ஒரு வேளை தொலைக்காட்சி முன் உட்காரும் சமயத்தையோ அல்லது கம்ப்யூட்டர் அல்லது மடிகணினியின் முன் செலவிடும் சமயத்தையோ குறைக்க வேண்டியதாகும்.

சுய அடக்கம் இல்லாவிடில் நமது ஜெபவாழ்வு, பெலவீனமாகவும், தவறு நிறைந்ததாகவும் வல்லமையற்றதாகவுமிருக்கும்.

நமது உள்ளங்கள் நமது பயனற்றதும் அளவுக்கடந்ததுமான கலாச்சாரங்களில் சிக்கியிருந்தால் சத்துரு அதை தனது வெற்றிக்காக எளிதில் பயன்படுத்திக் கொள்வான்.

Printed and Published by Wesley Devadason and Printed at Varukayin Thoothan Offset Press and Published at 3/8, Newport Street, Nagercoil - 629 001.
Editor : Wesley Devadason